## October 24, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பாலஸ்தீனத்தின் மேற்கு கரை பகுதியை இஸ்ரேலுடன் இணைப்பதற்கு ஆதரவான மசோதா மீது அந்நாட்டு நாடாளுமன்றத்தில் முதல்கட்ட வாக்கெடுப்பில் மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேறியது.
   i. காஸாவில் இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான மோதலை முழு மையாக முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா முயற்சித்து வரும் நிலையில், இந்த நடவடிக்கை அவமதிப்பு என்றும், அமைதிப் பேச் சுவார்த்தை முயற்சிகளுக்கு எதிரானது என்றும் அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் கடுமையாகக் கண்டித்துள்ளார்.
   ii. நெதன்யாகுவின் லிகுட் கட்சியைச் சேர்ந்த ஒரே ஒரு உறுப்பினர் மட்டுமே இந்த மசோதாவுக்கு ஆதரவளித்தார். நெதன்யாகுவே எதிர்ப்பு தெரிவித்திருப்பதால், சட்டம் ஆவதற்குத் தேவையான அடுத்தடுத்த வாக்கெடுப்புகளில் இந்த மசோதா நிறைவேற வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது.
   iii. 1967 மத்திய கிழக்கு போரில் இஸ்ரேலால் கைப்பற்றப்பட்ட மேற்கு கரையை, எதிர்கால சுதந்திர பாலஸ்தீன அரசின் ஒரு பகுதியாக பாலஸ்தீனர்கள் கோருகின்றனர். இஸ்ரேல் இந்த நிலப்பரப்பை இணைத்தால், உலக நாடுகளின் ஆதரவு பெற்ற 'இரு தரப்பு (இரண்டு நாடு) தீர்வுக்கான நம்பிக்கை முற்றிலும் சிதைந்துவிடும் என்று அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.
2. நெல்லுக்கான ஈரப்பத அளவை உயர்த்தும் கோரிக்கையை களஆய்வு மூலம் உறுதிப்படுத்த மத்திய குழு தமிழகம் வருகிறது.
   i. நெல் கொள்முதலுக்கு 17 சதவீதம் ஈரப்பத அளவாக மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. தமிழகத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக, நெல் மூட்டைகள் மழையில் நனைந்துள்ளன. இதனால், கொள்முதல் செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகபட்ச ஈரப்பத அளவை 17 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக உயர்த்த வேண்டுமென தமிழக அரசு கோரிக்கை விடுத்துள்ளது.
   ii. மாநிலத்தின் கோரிக்கையை களஆய்வு மூலம் உறுதி செய்து நிறைவேற்ற மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக மழையால் பாதித்த மாவட்டங்களில் நெல்லைச் சேகரித்து ஆய்வு செய்ய மூன்று குழுக்களை மத்திய கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைத்துள்ளது.
3. புது தில்லியில் நவ.3-ஆம் தேதிமுதல் வளர்ந்து வரும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமை மாநாடு நடக்கவிருக்கிறது என்று இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் தெரிவித்தார்.
   இதுகுறித்து பெங்களூரில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:
   i. மத்திய விண்வெளித் துறை உள்ளிட்ட 13 துறைகள் கூட்டாக புது தில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நவ.3 முதல் 5 ஆம் தேதி வரை வளர்ந்துவரும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமை மாநாட்டை நடத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
   ii. இந்த மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார். அதிநவீன பொருள்கள் மற்றும் உற்பத்தி, செயற்கை நுண்ணறிவு, உயிரி உற்பத்தி, நீல (கடல்சார்) பொருளாதாரம், எண்ம தகவல் தொடர்பு, 'மின்னணு மற்றும் செமிகண்டக்டர் உற்பத்தி, வேளாண் தொழில்நுட்பம், ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் வானிலை, சுகாதாரம் மற்றும் மருத்துவ தொழில்நுட்பம், குவாண்டம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விண்வெளி தொழில்நுட்பம் ஆகியவை குறித்து மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.
   iii. முதன்முறையாக விண்வெளிக்கு மனிதனை அழைத்துச் செல்லும் ககன்யான்

திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ககன்யான் திட்டத்துக்காக பல தொழில்நுட்பங்களை உருவாக்க வேண்டியுள்ளது. மனிதர்களை அழைத்துச் செல்வதற்கு ஏற்றதாக ராக்கெட் இருக்க வேண்டும்.

iv. பூமியை வலம் வருவதற்கான சுற்றுப்பாதை பெட்டகம் (மாட்யூல்) உருவாக்க வேண்டும். சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டு முறைகளை உருவாக்க வேண்டும். பெட்டகத்தில் பயணிப்போர் தப்பிக்கும் வழிமுறையை வடிவமைக்க வேண்டும். பாராசூட்களை வடிவமைக்க வேண்டும். மேலும், மனிதர்கள் பயன்படுத்தும் பொருள்களை உருவாக்க வேண்டும்.

v. இத்திட்டத்துக்கான 90 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. மனிதர்களை ஏற்றிச் செல்வதற்கு முன்பாக ஆளில்லாமல் சுற்றுப்பாதை பெட்டகத்தை விண்ணில் செலுத்தி சோதிக்க வேண்டும். ஆளில்லா பயணத்தில் வியோன் மித்ரா (மனிதனை ரோபோ) செல்லவிருக்கிறது.

vi. அதன் பிறகு விண்வெளி வீரர்கள் விண்ணுக்கு அனுப்பப்படு வார்கள். இது 2027-இல் சாத்திய மாகும். ஆக.24-ஆம் தேதி ககன்யான் திட்டத்துக்காக முதல் முறையாக ஒருங்கிணைந்த காற்றில் விடும் சோதனை மேற்கொள்ளப் பட்டது; இதில் பாராசூட் விரிவடைந்து பறக்கும் சோதனை நிகழ்த்தப்பட்டது.

4. நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ராணுவ நிலைகளில் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்திய 50 பயங்கரவாதிகளைக் கொன்றதாக நைஜீரிய ராணுவம் தெரிவித்தது.

   i. ஆப்பிரிக்காவில் மிக அதிக மக்கள்தொகை கொண்ட நாடான நைஜீரியா, போகோ ஹராம் மற்றும் பிற மதவாதக் குழுக்களின் வன்முறையால் 16 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டுள்ளது.

   ii. இதில் நைஜீரியாவின் வடகிழக்கில் 40,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

5. சீன அதிபர் ஷி ஜின்பிங்கை (72) கட்சி மற்றும் சக்திவாய்ந்த ராணுவத்தின் 'மைய'த் தலைவராக ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் உறுதிப்படுத்தியது. மேலும், ராணுவ உயரதிகாரிகளுக்கு எதிராக அவர் மேற்கொண்ட 'களையெடுப்பு' நடவடிக்கையை ஆதரித்ததுடன், உள்நாட்டு சந்தையை மேலும் வலுவாக்குவதற்கான புதிய 5 ஆண்டு திட்டத்துக்கும் கட்சி ஒப்புதல் அளித்தது.

   i. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 370 உறுப்பினர்களைக் கொண்ட முக்கிய அமைப்பான நிர்வாக மன்றம் திங்கள்கிழமை முதல் வியாழக்கிழமை வரை நடத்திய மாநாட்டுக்குப் பிறகு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

   ii. ராணுவ, பொருளாதார விவகாரங்களில் உறுதியான நிலைப்பாட்டைக் கையாண்டுவரும் ஷி ஜின்பிங், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனர் மாவோ சேதுங்குக்கு அடுத்தபடியாக மூன்று முறை அதிபர் பதவியை ஏற்ற ஒரே தலைவராக உள்ளார். இந்த நான்கு நாள் கூட்டத்தில், ஷி ஜிங்பிங்கை மையமாகக் கொண்டு கட்சியும் நாடும் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டது.

6. உக்ரைனுக்கு எதிராகப் போரில் ஈடுபட்டுள்ள ரஷியா மீது ஐரோப்பிய யூனியன் கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

   i. முன்னதாக, ரஷிய எண்ணெய் நிறுவனங்கள் மீது அமெரிக்க அதிபர் புதிய பொருளாதாரத் தடைகளை அறிவித்திருந்த நிலையில், தற்போது ஐரோப்பிய யூனியனும் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. அதேநேரம், இந்த நடவடிக்கைகள் பெரும்பாலும் பயனற்றவை என்று ரஷிய அரசின் ஊடகங்கள் நிராகரித்துள்ளன.

   ii. உக்ரைன் மீதான படையெடுப்புக்கு நிதி ஆதாரமாகத் திகழும் ரஷியாவின்

எண்ணெய் வருவாயை நிறுத்தி, போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சு வார்த்தையை மேற்கொள்ள ரஷிய அதிபர் புதினைக் கட்டாயப்படுத்தும் மேற்கத்திய நாடுகளின் முயற்சியின் ஒரு பகுதியாக இந்தத் தடைகள் கருதப்படுகின்றன.

iii. ஐரோப்பிய யூனியனின் இந்த புதிய நடவடிக்கைகள், தடைகளை ஏய்க்கும் வகையில் புனையப்பட்ட உரிமையாளர்களின் பெயர்களில் ரஷியா மறைமுகமாக இயக்கும் நூற்றுக்கணக்கான பழைய கப்பல்கள், ரஷிய எண்ணெய் மற்றும் எரி வாயு துறை, ரஷிய நிதித் துறை ஆகியவற்றைக் குறிவைக்கின்றன.

iv. மேலும், 27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய யூனியனுக்குள் ரஷிய செல்வாக்கு அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தும் ஒரு புதிய செயல்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

v. ரஷியா மீதான ஐரோப்பிய யூனியனின் கூடுதல் தடைகள் பற்றிய அறிவிப்பைத் தொடர்ந்து சர்வதேச கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய்க்கு 2 டாலர் வரை உயர்ந்தது.

7. இந்தியா-பூடான் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு, எல்லை மேலாண்மை உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக இரு நாடுகளும் உயர்நிலை ஆலோசனை மேற்கொண்டன.

i. இந்தியா-பூடான்பாதுகாப்பு மற்றும் எல்லை மேலாண்மை குறித்த 14-ஆவது உயர்நிலைக் கூட்டம், பூடான் தலைநகர் திம்புவில் கடந்த அக்டோபர் 16, 17 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

ii. இந்தியா-பூடான் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்தி, பாரம்பரியத் துறைகளுடன் வளரும் துறைகளிலும் ஒத்துழைப்பை மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

iii. புவியியல், கலாசாரம் மற்றும் மக்கள் ரீதியிலான தொடர்புகளில் வேரூன்றிய இந்தியா-பூடான் கூட்டாண்மை, பிராந்திய ஒத்துழைப்புக்கு முன்மாதிரியாக தொடர்ந்து திகழும்என்றுசெய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

iv. இரு நாடுகள் இடையிலான முந்தைய உயர்நிலைக் கூட்டம், கடந்த 2019-இல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

8. ராணுவத்தின் போர்த் திறனை மேம்படுத்தும் வகையில் ரூ.79,000 கோடிக்கு ஆயுதங்கள் போர்க்கப்பல்கள், அதிந வீன கண்காணிப்பு உபகரணங்களைக் கொள்முதல் செய்யபாது காப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்தது.

i. பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் தில்லியில் நடைபெற்ற பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் (டிஏசி) கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ii. பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் அமைந்திருந்த பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா நடத்திய 'ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு மேற்கொள்ளப்படும் இரண்டாவது மிகப் பெரிய அளவிலான ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் முடிவு இதுவாகும்.

iii. முன்னதாக, ரூ.67,000 கோடி மதிப்பில் ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களைக் கொள்முதல் செய்ய கடந்த ஆகஸ்ட் 5-ஆம் தேதி டிஏசி ஒப்புதல் அளித்தது. தற்போது,மேலும் ரூ.79,0000 கோடிக்கு கொள்முதல் செய்யப்பட உள்ளது.

iv. இதில், இந்திய விமானப்படைக்கு மேற்பரப்பில் ராணுவ ஹெலிகாப்டர் தரையிறங்கும் வசதியுடன் கூடிய போர்க் கப்பல்கள், போர்க் கப்பலில்

பயன்படுத்தப்படும் 30 மி.மீ. துப்பாக்கி, நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள், 70 மி.மீ. அதிவேக துப்பாக்கி, இன்ஃப்ரா ரெட் கண்காணிப்பு அமைப்பு ஆகியவை கொள்முதல் செய்யப்பட உள்ளன.

v. இந்திய ராணுவத்துக்கு பீரங்கி எதிர்ப்பு 'நாக்' மாக்-2 ஏவுகணை அமைப்பு, மின்னணு புலனாய்வு தகவல் சேகரிப்பு அமைப்பு (இஎல் ஐஎன்டி), ஆயுதங்களை எடுத்துச் செல்வதற்காக கனரக வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளன.

vi. இந்திய விமானப் படைக்கு நீண்டதூர இலக்குகளைப் பின்தொடர்ந்து சென்று தாக்கி அழிக்கும் ஏவுகணை அமைப்பு (சிஎல்ஆர்டிஎஸ்/டிஎஸ்) உள்பட மேலும் சில உபகரணங்களைக் கொள்முதல் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்புத் துறை அமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. பிஎம்ஸ்ரீ பள்ளிகள் திட்டத்தில் இணைய மத்திய அரசுடன் கேரள அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

i. கேரளத்தில் முதல்வர் பினராயி விஜயன் தலைமையிலான இடதுசாரிகள் கூட்டணி ஆட்சி நடைபெற்று வரும் நிலையில் இந்திய கம்யூனிஸ்ட் எதிர்ப்பைமீறி இந்த ஒப்பந்தத்தில் மாநில அரசு கையொப்பமிட்டது.

ii. ஒரு பிளாக்கில் உள்ள 2 பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அவ்வாறு தேர்ந் தெடுக்கப்படும் பள்ளிகளுக்கு ஆண்டுக்குத் தலா சராசரியாக ரூ.1 கோடி நிதியுதவியாக வழங்கப்படும். முதலில் இத்திட்டத்துக்கு மாநில அரசு எதிர்ப்பு தெரிவித்த நிலையில், தற்போது சம்மதித்துள்ளது.